GODDependence
True freedom is being dependent on God
செய்தி மடல்

ஜனவரி | 2026




# “வெளிச்சம் உண்டாகக்கடவது”

“இருள் பற்றிய உங்கள் வரையறை என்ன?” என்று உங்களிடம் யாராவது கேட்டால், உங்கள் அன்புக்குரியவர்களை இழந்த இருண்ட மற்றும் கடினமான காலங்களை, அல்லது உங்கள் எதிர்காலத்தைப் பற்றி எவ்வித நம்பிக்கையும் இல்லாமல் தவித்த காலங்களை, அல்லது உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அனுபவித்த நோய்கள் அல்லது விரும்பத்தகாத சம்பவங்களைப் பற்றி நீங்கள் யோசிக்கலாம். கடைசியாக, இருண்ட காலங்களில் நம்மால் எதையும் தெளிவாகப் பார்க்க முடியாது என்பதையும் நீங்கள் நினைவுகூரலாம். ஆம், இருள் என்பதற்கான பொதுவான வரையறை என்னவெனில் ஒளி அல்லது வெளிச்சம் இல்லாத ஒரு நிலையே இருள் என்பதாகும்.

”தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று” என்று ஆதியாகமம் 1:3-இல் நாம் வாசிக்கிறோம். இது வேதாகமத்தில் தேவன் பேசியதாக வருகிற முதலாவது பதிவு ஆகும். ”பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது, ஆழத்தின்மேல் இருள் இருந்தது” என்ற அந்த நிலையில் இதுவே தேவன் பேசிய வார்த்தை ஆகும். இங்கே தேவனுடைய கட்டளைக்கு உடனடியாக பதில் கிடைத்ததைக் பார்க்கிறோம். தேவனுடைய சிருஷ்டிப்பு எந்தத் தாமதமும் இல்லாமல் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறது. பூமியானது எப்படி, எப்போது, ஏன் ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் ஆனது

நாம் தேவனுடைய சத்தியங்களை அதிகமாக வாசித்து, அந்த சத்தியமானது நம் சிந்தனைகளை நிரப்ப அனுமதிக்கும்போது, பொய்களையும், விஷ சிந்தனைகளையும் பற்றி யோசிக்க நாம் குறைவான நேரம் செலவழிப்போம் - லைசா டெர்கெர்ஸ்ட்

என்று நமக்குச் சொல்லப்படவில்லை. எல்லா இடங்களிலும் இருள் சூழ்ந்திருந்தது. இங்கே வேதாகமம் சொல்வதை நாம் கவனமாக பார்ப்போம்: ”தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.” வேறுவிதமாகக் கூறினால், அந்த இருள் இன்னமும் தேவனுடைய ஆவியின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருந்தது. தேவன் இருளுக்குக் காரணமாக இருப்பதில்லை, எல்லா இருளும் தேவனுடையடைய ஆளுகைக்கு உட்பட்டதே.

இன்றும், சாத்தானால் ஏற்படுத்தப்பட்ட மாய இருளில் உலகம் சிக்கித் தவிப்பதைப் பார்க்கிறோம். உங்களுடைய அல்லது உங்களுக்குப் பிரியமான நபருடைய வாழ்க்கையில் உள்ள இருளைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா? நினைவில் கொள்ளுங்கள்: இருள் என்பது ஒரு கதையின் முடிவல்ல. தேவனுடைய வார்த்தை அந்த இருளுக்குள் ஊடுருவிச் செல்ல நாம் அனுமதிக்கும்போது, நாம் அவருடைய ஒளியைக் காண்போம். அதன் பின், இருள் அங்கே இருக்காது, இருக்கமுடியாது. “இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் ”நற்செய்தியைப் பிரசங்கிக்கவும் அறிவிக்கவும் கிறிஸ்துவின் ஒளியினால் நம் இருதயங்களை பிரகாசமடையச் செய்திருக்கிறார். நாம் தேவனுடைய ஒளியில் நடக்க அழைக்கப்பட்டிருக்கிறோம், ”நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது” என்று இயேசு சொல்கிறார்.

”உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” (சங்கீதம் 119:105) என்று நாம் சொல்வோமா? இந்த 2026ம் ஆண்டில் தேவனுடைய வெளிச்சத்தில் நடக்க நாம் தீர்மானிப்போம்.

-சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.

## ஆசிரியர் குழு


- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி


மகா பெரிய (வேதப்) புத்தகத்தின் மீதான உண்மையான அன்பு மகா பெரிய தேவனிடம் இருந்து மாபெரும் அமைதியை நமக்குக் கொண்டு வருகிறது, மேலும் அது நமக்கு மிகப்பெரியதொரு பாதுகாப்பாகவும் இருக்கிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்

# ஆசிரியரிடமிருந்து....

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய வருடத்தைக் காணவும் இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த புதிய ஆண்டு நம் ஒவ்வொருவருக்கும் ஒரு கனி கொடுக்கும் ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன். நாட்டு நடப்புகளை நுட்பமாக நோக்கிப் பார்த்தால், நாம் இன்றும் ஜீவன் சுகம் பெலனோடு இருப்பது தேவனுடைய சுத்த கிருபையே என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். லூக்கா 13:6-9 இல் இயேசு சொன்ன உவமை மூலம் நாம் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**காலம்: (வ 6,7)** இந்த உவமையில் திராட்சை தோட்டத்தின் உரிமையாளர் தான் நட்டிருந்த அத்திமரத்தில் மூன்று ஆண்டுகளாக கனியைத் தேடிவந்தும், ஒன்றையும் காணாத படியினால், அதனை வெட்டிப்போட தீர்மானிக்கிறார். அதற்கு திராட்சைத் தோட்டக்காரனோ, "ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்..." என பரிந்து பேசுகிறார். ஒரு நோக்கத்திற்காக நம்மை இந்த உலகில் படைத்த தேவன் அது நம்மில் நிறைவேறினதா என மீள்பார்வை செய்யும் போது, நம்மைக் கொண்டு பிரயோஜனமில்லை என தெரிந்தால் இனிமேல் நமக்கு இந்த வாழ்க்கை அவசியமில்லை என அவர் தீர்மானிக்க அவருக்கு உரிமையும் அதில் நியாயமும் உண்டு. ஆனால், பரிந்துரை செய்த தோட்டக்காரன் போன்றே நமக்காக பரிந்து பேசும் இயேசுவானவர் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பரிந்துரையினால், திரியேக தேவனின் கிருபையினால் இந்த வருஷமும் நமக்கு ஈவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஆண்டிற்குள் நுழைந்திருக்கும் நாம் இதனை உணர வேண்டும். இந்த ஆண்டும் நமக்கு வழக்கம் போன்ற ஒரு ஆண்டாக இருக்கக் கூடாது. வயது மற்றும் உடல் தகுதியை வைத்து, எப்படியாகிலும் இந்த வருடம் நிச்சயமாகாக நாம் வாழப்போகும் ஆண்டு தான் என உரிமை கொண்டாடும் நிலைமை நமக்கு இல்லை. இது தேவனுடைய சுத்தக் கிருபையே. கிருபையாய் நமக்கு காலத்தை நீட்டி தந்திருக்கிற தேவன், தனது எதிர்பார்ப்பையும் அது நிறைவேறும் காலத்தையும் நீட்டிக் கொடுத்துள்ளார். அதனை அவர் நிறைவேற்ற வல்லவராகவும் இருக்கிறார்.

**பராமரிப்பு: (வ 8)** தோட்டக்காரன் அதன் உரிமை யாளரிடம் அத்தி மரத்திற்காக ஒரு வருட காலத்தை மட்டும் நீட்டிக்கக் கேட்டுக் கொள்ளவில்லை. "நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன்" என கூறுகிறார். சுற்றிலும் கொத்துதலும் உரமிடுதலும் எல்லா விதத்திலும் தோட்டக்காரனுக்கும் மரத்துக்கும் அசௌகரியமான ஒன்று தான். ஆனால் அவை அதன் வளர்ச்சிக்கும் கனி கொடுத்தலுக்கும் மிகவும் அவசியமானவை. நம்மில் காணப்படும் மறைவான பாவங்கள், தவறான முன்னுரிமைகள் மற்றும் ஆன்மீக அலட்சியங்கள் இவற்றை நம்மிடம் இருந்து அகற்ற, தேவன் சிலவேளை நம்மைக் கொத்த வேண்டியது இருக்கும், பலவேளை எருப்போட வேண்டியது இருக்கும். அவரது இந்த சிகிச்சை முறைக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

அவருடைய வார்த்தை, நமது ஜெப வாழ்க்கை, விசுவாசிகளுடம் ஐக்கியம் இவை மூலம் அவர் நமக்கு எருப் போடுகிறார். இந்தப் புதிய ஆண்டு தேவன் நம்முடைய உள்ளங்களில் ஆழமான வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். இந்த ஆண்டில் அது நடக்கவில்லை எனில் இந்த ஆண்டும் வழக்கம் போல் இன்னுமொரு ஆண்டாக கடந்து போகும். நமது எதிர்காலம் குறித்த நிச்சயமும் இலலாமல் போய்விடும். எனவே இந்த வருடத்தில், தேவனுடைய கரத்தில் நம்மை அர்ப்பணிப்பது மூலமாக நமது வாழ்க்கையில் உண்மையான வளர்ச்சி மாற்றங்கள் நடைபெற அனுமதிப்போம்.

நாம் தேவனுடைய பரிபூரண, அளவற்ற அன்பைப் பெற்றுக்கொள்ளும்படி அவர் குறைகள் நிரம்பிய மனிதர்களுக்கு தன் அன்பின் கடிதத்தை எழுதினார்.

**கனி: (வ9)** கனியை எதிர்பார்த்து தான்தேவன் கிருபையாய் நமக்கு கூடுதலாக ஒரு வருடத்தைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையை நீட்டித்திருப்பது அவருடைய பொறுமையோ அவருடைய கிருபையோ மட்டுமல்ல. நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் இந்த வருடத்திலாவது கனிகளைக் கொடுக்க மாட்டோமா என்ற எதிர்பார்ப்பில், நம்மை விட்டு வைத்திருக்கிறார். அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற ஆவியின் கனி நம்மில் கனிந்து, அவரைப் போன்ற குணநலன்களுடன் அவருக்கு கீழ்ப்படிந்த வாழ்க்கை, அவருடைய அன்பினால் மற்றவர்களுக்கு சேவை, பிறரை அவரிடம் வழிநடத்தும் சாட்சி வாழ்க்கை போன்ற கனிகளை அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

இந்த ஆண்டின் நாட்களும் வாரங்களும் மாதங்களும் கடந்து செல்லச் செல்ல, நம்மில் என்ன கனி உருவாகி இருக்கிறது என நாம் அவ்வப்போது நம்மை மீள்பார்வை செய்து கொள்வது அவசியமாக இருக்கிறது. அவருக்கான நமது வெறும் செயல்பாடுகளில் (activities) தேவன் திருப்திபடப் போவதில்லை, நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் கனிகளையே அவர் எதிர்பார்க்கிறார். கனி தரும் வாழ்க்கை தேவனை மகிமைப்படுத்துகிறது. மற்றவர்களுக்கும் ஆசிர்வாதமாக அமைகிறது.

இந்த புதிய ஆண்டு தேவனுடைய வார்த்தை, ஜெப வாழ்க்கை மூலமாக அவர் நம்மைக் கொத்தி உரமிட அனுமதித்து, வாழ்க்கையில் மாற்றம் பெற்று, அவருக்காக கனி கொடுக்கும் ஆண்டாக மாறட்டும்.

கடந்த மாதத்தில், சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR 2025) சார்ந்த அனைத்து நிகழ்வுகளையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்த அவருடைய மேலான கிருபைக்காக அவருக்கு நாம் நன்றி செலுத்துவோம். 8 மொழிகளில் அந்தந்த மொழி வேதாகமத்தின் வரலாறு குறித்த GODependence கருத்தரங்கங்கள், 6 மொழிகளில் தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சிகள் மற்றும் 7 மொழிகளில் சர்வதேச வேத வாசிப்பு தின Zoom கூடுகைகள் என பல நிகழ்வுகள் நடைபெற்றன.

2025 டிசம்பர் 21 ஞாயிறு அன்று 2025 ஆம் வருட நமது ஊழிய நடவடிக்கைகளை ஆய்வு செய்யவும், 2026 ஆம் வருடத்திற்கான காரியங்களை ஜெபத்துடன் திட்டமிடவும் GODependence குழுவிற்கு தேவன் கிருபை பாராட்டினார். 2026 புதிய வருட வேதவாசிப்பு சவால்களில் பலரும் இணையும் போது குழுவாக நாங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் அவைகளை எதிர்கொள்ளும் வழிகள் 2026 இல் இன்னும் சிறப்பாக ஆண்டவருக்காக சேவைகளை செய்வதற்கான திட்டமிடல்கள் நிறைவேறின.

ஜனவரி 2026 புதிய வேத வாசிப்பு சவால்களை தொடங்கும் போது நமது 3 எண்களும் மீண்டும் வாட்சாப்பில் spam பிரச்சனைகளை சந்தித்தன. இருப்பினும் அவைகளையும் தாண்டி, சுமார் 2400 பேர் புதிய சவால்களில் இணைய தேவன் கிருபை பாராட்டினார்.

மாதந்தோறும் GODependence கருத்தரங்கை இந்த வருடம் தடையில்லாமல் நடத்த தீர்மானித்து செயல்படுகிறோம். மாதந்தோறும் ஒரு தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சிகளை முன்னெடுக்கவும் திட்டமிடுகிறோம். இந்த வருடத்தில் வேத தியான குழுக்களும் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் அதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து செய்யப்பட வேண்டும் இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்த வருடத்திலும் வழக்கமான ரமலான் வேத வாசிப்பு லந்து கால வேத வாசிப்பு போன்ற சவால்களையும் சிறப்பாக செயல்படுத்த எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தொடர்ந்து நமது செய்திமடல்கள் ஒவ்வொரு மாதமும் தடையின்றி மாதத்தின் ஆரம்பத்திலேயே வெளிவரவும், அநேகருக்கு பயனுள்ளதாக விளங்கவும் நமது செய்தி மடல்களின் ஆசிரியர் குழுவுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - ஜனவரி 2026

## துதிப்போம்:

- 1. 2025 ம் வருடம் முழுவதும் ஆண்டவர் நம்மை பாதுகாத்து, வழிநடத்தி வந்த விதங்களுக்காக. நம்முடைய தனிப்பட்ட காரியங்களில் / குடும்பத்தில் / வேலை இடங்களில் / ஊழியங்களில் / அவருடைய கிருபை இம்மட்டும் இருந்ததற்காக.
- 2. டிசம்பர் 16 - சர்வதேச வேத வாசிப்பு தினத்தை (IDBR2025) சிறப்பாக அனுசரிக்க ஆண்டவர் உதவி செய்ததற்காக. சர்வதேச வேத வாசிப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற Mega Online Quiz, Children Quiz மற்றும் Bible Readathons, GODependence Talk Shows and IDBR Zoom Meetings போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு தங்களுடைய பங்களிப்பை அளித்த / பயன்பெற்ற ஒவ்வொருவருக்காக.
- 3. GODependence ஊழியத்தில் 2025 ம் ஆண்டு நடைபெற்ற ஊழியங்களை மதிப்பாய்வு செய்யவும் 2026 ம் ஆண்டிற்கான ஊழியங்களைத் திட்டமிடவும், December 21 ம் தேதி GODependence குழு கூடிவர தேவன் உதவியதற்காக.
- 4. 2025 ம் வருடத்தில் தங்களுடைய வேத வாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்த ஒவ்வொருவருக்காக.
- 5. பல தடைகளையும் தாண்டி 2026 ஜனவரி மாத வேதவாசிப்பு குழுக்கள் 10 மொழிகளிலும் ஆரம்பிக்கப்பட ஆண்டவர் கிருபை பாராட்டியதற்காக.

## ஜெபிப்போம்:

- 1. ஜனவரி 2026 வேதவாசிப்பு குழுக்களில் இணைந்து இருக்கிற 2400 நபர்களுக்காக, 2026 ம் ஆண்டில் முழு வேதாகமத்தையும் வாசித்து முடித்து விட வேண்டும் என்ற ஒரு பொருத்தனையோடு வெவ்வேறு கால அளவு வேத வாசிப்பு குழுக்களில் இணைந்து இருப்பவர்கள் அந்த சவால்களை வெற்றிகரமாக நிறைவு செய்ய.
- 2. ஒவ்வொருவரும் வேத வாசிப்பு மற்றும் ஜெபத்தின் மூலமாக தேவனோடு நெருங்கி ஜீவிக்கவும், புதிய வருடத்தில் புதிய கிருபைகளை பெற்றுக்கொள்ளவும்.
- 3. வேத வாசிப்புப் பகுதிகளை அனுப்ப பயன்படுத்தும் GODependence ன் 3 எண்களும் Spam issue வினால் அடிக்கடி தடை செய்யப்படாமலிருக்க.
- 4. 2026 ம் ஆண்டிற்கென்று திட்டமிடப்பட்டிருக்கின்ற காரியங்களை நேர்த்தியாக செயல்படுத்த ஆண்டவர் GODependence குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஞானத்தை தர.
- 5. 2026 ஆம் ஆண்டில் சர்வதேச வேதவாசிப்பு தின நிகழ்வுகள் (IDBR2026) உலகின் பல்வேறு தேசங்கள் பல மொழிகளிலும் அனுசரிக்கப்பட, அதற்கான ஆயத்தங்களை GODependence குழு முன்னெடுக்கத் தேவையான கிருபைகளை தேவன் அருள.

பயத்துக்கு இடம் கொடுப்பது உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய மிகச் சிறந்த திட்டத்தை மாற்றுகிறது. ஆகவே, மிகவும் பயத்துடனே செய்ய வேண்டியதாயிருந்தாலும் கூட, தேவன் செய்ய விரும்புகிறதைச் செய்ய அவருடைய வார்த்தையின் வல்லமையைப் பயன்படுத்துங்கள். அதனால் உண்டாகும் பலன்கள் மிகப்பெரிதாக இருக்கும். - ஜாய்ஸ் மேயர்

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்

### முழக்கம்: 2. விசுவாசம் மட்டுமே!- (Faith Alone)

மார்ட்டின் லூத்தரின் சிந்தையைக் கிளறி விட்டுக், கொழுந்துவிட்டு எரியச் செய்த திரு வார்த்தை, ரோமர் 1:16,17, "விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்குக் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவ வல்லமையாயிருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்பது வேதத்தில் எங்கோ ஒரு மூலையிலுள்ளதல்ல. திருமறையில் 4 இடங்களில் அது வருகிறது: ஆபகூக் 2:4, கலாத்தியர் 3:11, ரோமர் 1:17, எபிரெயர் 10:38. இதின் கருத்து என்னவெனில், மார்க்கத்தின் எவ்விதக் கிரியைகளினாலும் அல்ல, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதே. அப்போஸ்தலன் பவுல் இதனை எபேசியர் 2:8,9இல் அழுத்தந்திருத்தமாய்க் கூறுகிறார்: "கிரு பையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக் கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமையடிக் காதபடி இது கிரியைகளினால் உண்டானது அல்ல." "உங்களால்" உண்டானது அல்ல – நாம் யாராய் இருக்கிறோம் என்பதைப் பொருத்ததல்ல. "கிரியை களினால்" உண்டானது அல்ல – நாம் யாது செய்கிறோம் என்பதைப் பொருத்ததல்ல.

இங்குதான் பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்குமுள்ள அடிப்படை வேற்றுமை தெளிவாகிறது. பழைய உடன்படிக்கை சொல்லுவதாவது: உபாகமம் 6:25, "நமது தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமூகத் தில் இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யக் கவனமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும்." மாறாக, புதிய உடன்படிக்கை சொல்லுவதோ: ரோமர் 3:21,22, "இப்பொழுதோ, நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவ நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது ... அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே. விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும், எவர்கள்மேலும் அது பலிக்கும்!"

விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டு மெனப் போதித்தவர்களால் தொந்தரவு செய்யப்பட்ட கலாத்திய நாட்டு விசுவாசிகளுக்குப் பவுல் இச்சத்தியத்தை வலியுறுத்துகிறார்: கலாத்தியர் 2:15,16, "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மனிதன் நீதிமானாக்கப்படுவது இல்லை என்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதி ன்களாக்கப்படும்படிக் கிறிஸ்து இயேசுவின்மேல்

வேதத்தைப் பெறுவதிலும், வேதத்தை வாசிப்பதிலும் அனுதினமும் நான் தேவனிடம் இருந்து ஒரு வார்த்தையைப் பெறுகிற ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருக்கிறேன். மேலும், பரிசுத்த வேதாகமம் மூலமாக தேவன் பேசுகிறார். - டெட் குரூஸ்

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் எந்த மனிதனும் நீதிமானாக்கப்படுவது இல்லையே!" இந்த நிருபத்தில் "விசுவாசம்" எனும் சொல் திரும்பத் திரும்ப வருவது உங்களை மெய்சிலிர்க்கச் செய்யும் (கலாத்தியர் 2:20, 3:2,5, 6,7,8,9,11,12,14,22,23,24,25, ...). நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 ஆண்டுகட்கு முன்னர் ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான் (கலாத்தியர் 3:17). நியாயப் பிரமாணம் பின்னர் கூட்டப்பட்ட ஒன்று, அதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே: "வாக்குத் தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக் கிரமங்களின் பொருட்டு கூட்டப்பட்டது" (வச 19). அந்தச் "சந்ததி" அல்லது "வித்து" என்பது கிறிஸ் துவையே குறிக்கும். "விருத்தசேதனம் உள்ளவனா யிருந்தபோது அல்ல, விருத்தசேதனம் இல்லாதவ னாயிருந்தபோதுதான்" ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது (ரோமர் 4:9,10). ஆம், விருத்தசேதனத்தினாலோ, நியாயப்பிரமாணத்தி னாலோ அல்ல, விசுவாசத்தினாலேயே ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான். இது இன்று நமக்குப் போதிப்பது யாது? குழந்தை ஞானஸ்நானமோ, வயதுவந் தோர் ஞானஸ்நானமோ, தெளிப்பு ஞானஸ்நானமோ, முழுக்கு ஞானஸ்நானமோ, நம்மை இரட்சிப்ப தில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் சொந்த இரட்சகராகத் தனிப்பட்டு விசுவாசிக்கும் நொடியிலேயே தேவனுடைய பிள்ளையாகிறீர்கள் (யோவான் 1:12, ரோமர் 10:9-11). அடுத்து, கீழ்ப்படிதலின் முதல்படியாகத் திருமுழுக்கு தொடர்கிறது (அப்போஸ்தலர் 8:36&38, 10:47,48, 16:30-33).

கிறிஸ்துவின்மீது விசுவாசம் என்பது மட்டுமே இரட்சிப்புக்கு ஒரே நிபந்தனை. அபாரமான இரு எடுத்துக்காட்டுகள் இதோ: (1) காசா வனாந்தரத்தில் எத்தியோப்பிய மந்திரி ஒருவருக்குச் சுவிசேஷகன் பிலிப்பு இயேசுவைப் பிரசங்கித்தார். வழியில் தண் ணீரைக் கண்டவுடன் பிலிப்புவிடம் மந்திரி கேட் டது: "இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ் நானம் பெறத் தடையென்ன?" (அப்போஸ்தலர் 8:35,36). அவனுக்குக் கிடைத்த உடனடிப் பதிலை நன்கு கவனியுங்கள்: "நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை!" (வச 37). (2) பிலிப்பிய சிறையதிகாரி பவுலையும் சீலாவையும் பார்த்து, "ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். அவ ருக்கும் வந்த உடனடிப் பதில்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப்போஸ்தலர் 16:30,31). அவன் தனது குடும்பத்தாருடன் கிறிஸ்& துவை விசுவாசித்தான். "நள்ளிரவில் அந்நேரத்தில் தானே" அவர்கள் திருமுழுக்கு பெற்றனர் (வச 33). இந்த இரு நிகழ்வுகளிலும் "இரட்சிக்கப்படுவது எப்படி" என வினவியவருக்கு "இரட்சிப்பின் ஏழு படிகள்" என்று பதில் தரப்படவில்லை! ஏழு படிகள் ஏறினால் இளைப்புதான், இரட்சிப்பு எங்கே?

பரிசுத்த வேதாகமமானது நமக்கு புத்தகங்களுக்கெல்லாம் புத்தகமாக மிகப் பிரதானமானதாக இருக்க வேண்டும்; பரிசுத்த வேதாகமத்துடன் ஒப்பிடுகையில் மற்ற அனைத்து புத்தகங்களும் மதிப்புக் குறைவானவை என்று கருதப்படவேண்டும். - ஜார்ஜ் முல்லர்

சீடத்துவத்தை இரட்சிப்புக்கு நிபந்தனையாய் முன்வைக்கும் உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கை! திருமுழுக்கு பெறுவதற்கு ஆன்மீகத்தில் ஒரளவு வளரவேண்டுமென இவ்வுபதேசம் போதிக்கிறது. “சீடன்” என்றால் “மாணவன்” என்றே பொருள். நீங்கள் பாலர் பள்ளியிலிருந்தாலும், முதுநிலைப் பட்ட வகுப்பிலிருந்தாலும் மாணவர்தான். மாணவராய்ச் சேர்ந்த பின்னர்தான் அறிவில் வளருகிறீர்கள். அப்படியே, இயேசுவை முழு இருதயத்தோடு விசுவாசிக்கும் நொடியில்தானே “சீடராய்ச்” சேர்ந்துவிடுகிறீர்கள் (மத்தேயு 28:19). அடுத்துதான் தொடர்ந்த உபதேசத்தினால் வளர்ச்சி (வச 20). “ஏறுதல், இறங்குதல்” போன்ற சுய முயற்சிகளினால் அல்ல, நாவின் அறிக்கையினாலும் இதய விசுவாசத்தினாலுமே இரட்சிக்கப்படுகிறோம் (ரோமர் 10:4&10). திரு முழுக்கு பெறுமுன் ஆதிவாசிப் பெண்கள் தங்கள் கைகளிலுள்ள வளையல்களை உடைக்கவேண்டு மென்று வற்புறுத்தப்பட்டதால், ஒரு மிஷனரி இயக் கம் ஒர் ஆதிவாசி இனத்தையே இழந்தது. ஐயகோ, புதிய ஏற்பாட்டுச் சத்தியங்களைப் புரிந்துகொள்வதில் எவ்வளவு தவறிவிட்டோம்! (அப்போஸ்தலர் 15:28,29). (தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள விசுவாச வாழ்வு எனும் எனது 128 பக்க நூலை வாசியுங்கள்.)

------------ தொடரும்

**(சகோ. R. ஸ்டான்லி அவர்கள் எழுதிய ”நான் நிற்கும் கன்மலை” என்ற நூலில் இருந்து)**

## நமது தரிசனம் & நமது பணித்திட்டம்

### நமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

GODependence

### நமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

தேவனுடைய வார்த்தையை உடையவர்களாக இருப்பது எவ்வளவு மேன்மையும் மகத்துவமுமானது! - மார்ட்டின் லூத்தர்

# வேதவாசிப்பு சவால்கள்

## 2026 பிப்ரவரி 01 முதல்

**என் மறைவிடமும் என் கேடகமும் நீரே; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்." - சங்கீதம் 119:114**

புத்தாண்டு தீர்மானங்களின் ஒரு பகுதியாக ஜனவரி 2026 முதல் நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கியிருப்பீர்கள். இன்றைய நிலவரப்படி உங்களால் அதனைத் தொடர்ந்து வாசித்து வர முடிந்ததா?

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 பிப்ரவரி 2026 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.




நேர்மையான தேடலின் மூலம் சிந்திக்கும் எந்த மனிதனும் வாழ்க்கை அல்லது விதி பற்றிய நேர்மையான எந்தக் கேள்விக்கும் தேவனுடைய பதிலைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம் ஆகும். - ஜான் ரஸ்கின்

# வேதவாசிப்பு சவால்கள்

## 2026 பிப்ரவரி 01 முதல்

**பின்வருவன நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

🧑‍💼♂️ ”கர்த்தருடைய பெரிதான கிருபையினால், நான் பைபிள் வாங்கிய கடந்த ஏழு ஆண்டுகளில் ஒருமுறை கூட முழுமையாக இதுவரை வாசித்தது இல்லை... தேவனுக்கு மகிமை உண்டாக்கும்படியாக Godependence வேதம் வாசிப்பு சவாலின் வழிகாட்டுதல் மூலமாக முதன்முறையாக முழு வேதத்தையும் 4 மாதத்தில் ஒருமுறை வாசித்து முடித்திருக்கிறேன்... சகல துதி கன மகிமை கர்த்தருக்கே உண்டாவதாக...”
**- Thirunavukkarasu R.**

🧑‍💼♂️ “இது ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. நானும் என் மனைவியும் தினசரி வேத வாசிப்பு பகுதிகளை வாசித்தோம். தினமும் வேதத்தை வாசித்து வாரந்தோறும் வினாடி வினாவிற்கு பதிலளிப்பது ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.” **– Bashkaran T.**

🧑‍💼♀️ ”எந்த சிரமமும் இல்லாமல் ஒரு வருடத்தில் வேதத்தை வாசிக்க மிகவும் உபயோகமாக உள்ளது. இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வரும் மீள்பார்வை, வாராவாரம் வரும் வினாடி வினா, இவை வேத வாசிப்பை தவறாமல் மேற்கொள்ள உறு துணையாக இருக்கின்றன.100 சதவீதம் வாசித்து விட்டேன் என எப்படியாவது கூற வேண்டு மென்ற ஆவலில் வார இறுதியிலாவது விடுபட்ட பகுதிகளை வாசித்து முடிக்க மனது துடிக்கிறது.”
**- ஜா.ஜேஸ்மின் பியூலா மார்க்ரெட்**

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 பிப்ரவரி 2026 முதல் தொடங்கும் ”வேத வாசிப்பு சவால்களுக்கு” GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✴ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

தேவனுடைய வார்த்தையினால் நிறைந்திருக்கிற ஆக்கப்பூர்வமான சிந்தனையானது வெளிப்பார்வைக்கு அருவருப்பானதாக தோன்றுகிறவைகளை தெய்வீக வல்லமை உடையதாக மாற்றும் சக்தியை உங்களுக்கு கொடுக்கிறது. - ஜாகின்மா N.E. ஆகு

# வேதவாசிப்பு சவால்கள்

## 2026 பிப்ரவரி 01 முதல்

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

❝ எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

- GODependence குழு

CLICK HERE » wa.me/96565962559

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே! ❞

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்: 2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்: 1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்: 60 நிமிடங்கள்

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்: 45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்: 25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்: 15 நிமிடங்கள்

**இன்னும் தாமதம் ஏன்?**
**இன்றே சேருங்கள்.**

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

# GODependence வேதவாசிப்பு சவால்கள்

GODependence
True freedom is being dependent on God

## Bible Reading Challenges

### GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

ஒரு மெழுகுவர்த்தியையும், ஒரு வேதாகமத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டு ஒரு இருட்டு அறையில் என்னை அடைத்து விடுங்கள், இந்த உலகம் என்ன செய்கிறது என்ற அனைத்தையும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். - ஜே சி ரைல்

# வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 15

**வேதப்பகுதி: 1 தீமோத்தேயு**

### இடமிருந்து வலம்

1. _________ ஐ பற்றிக்கொள் (7)

5. கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல____யை விரும்புகிறான் (2)

8. சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே _____ (6)

10. சிலருடைய _____ அவர்களை பின்தொடரும் (5)

### வலமிருந்து இடம்

9. பின்பு உருவாக்கப்பட்டவள் (3)

11. அற்பபிரயோஜனமுள்ளது (7)


### கீழிருந்து மேல்

7. _____ ஒருவரே (3)

10. பவுல் தன்னை பிரதான___ என்றார் (2)

### மேலிருந்து கீழ்

2. நமக்கு சம்பூரணமாய் கொடுக்கிறவர் _____தேவன் (5)



### மேலிருந்து கீழ்

3. வேலையாள் ___க்கு பாத்திரன் (2)

4. விசுவாசத்தில் உத்தமகுமாரன் (6)

5. பண ஆசை எல்லாத்தீமைக்கும் ____ (2)

6. அடையும்படி நாடவேண்டியவைகளில் ஒன்று (2)

**குறிப்பு** : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/fTVHexHbrHqS3otL8

கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/01/2026க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

ஜனங்கள் வேதாகமத்திற்குத் திரும்பி, தங்களுடைய தலைமுறையில் தேவனுடைய வார்த்தையை புத்துணர்வுடன் கேட்டு அவ்வார்த்தையின் சவாலை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே பல பெரிய எழுப்புதல்கள் வரலாற்றில் நடந்திருக்கின்றன. - கிரெய்க் கீனர்

# நாடக ஆசிரியர் அருட்பணியாளராதல்
# அதோனிராம் ஜட்சன்
## (1788-1850)

ஒரு குருவானவர் வீட்டில் சிறுவர் குழு ஒன்று ”என்னுடைய சுவிசேஷத்தைப் போய் பிரசங்கி என்று கர்த்தர் சொல்லுகிறார்” என்ற பாடலைப் பாடிக் கொண்டிருந்தது. அது ஒரு ஞாயிறு பள்ளியோ சிறுவர்களுக்கான கூட்டமோ அல்ல. பாடலுக்குப் பின் நான்கு வயது பையன் ஒருவன் நாற்காலியின் மீது ஏறி நின்றான். அந்தக் கூட்டத்திற்கு மிகவும் பக்தி வினயமாக அருளுரை ஆற்றினான். இந்தச் சிறு பிள்ளைகள் ”சபை விளையாட்டு” விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதில் குருவானவரின் மகனான அதோனிராம் ஜட்சன் அருளுரை ஆற்றினான்.

**இளமைப் பருவம்:**

அதோனிராம் ஜட்சன் 1788ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஒன்பதாம் நாளில் பிறந்த இவர் இளமையிலேயே திறமைசாலியாக விளங்கினார்.

**அறிவும் திறமையும் கொண்ட மாணவன்:**

மூன்று வயதிலேயே இவர் தெளிவாகப் படிக்கக் கற்றுக்கொண்டார். வேதப் புத்தகத்தின் ஒரு முழு அதிகாரத்தையும் ஒரு நாள் இவர் வாசிக்கக் கேட்ட இவர் தந்தை பெரும் வியப்புக்குள்ளானார். கணிதத்தில் அவருக்குப் பெருவிருப்பம் உண்டு. பத்து வயதிலேயே ஒரு கணித மேதையாக விளங்கினார். மேலும் அவர் லத்தீன், கிரேக்க மொழிகளில் கருத்துள்ள இறையியல் புத்தகங்களையும் படித்தார். கிரேக்க மொழியில் இவருக்கு இருந்த திறமை குறிப்பிடத்தக்கது.

16ஆம் வயதில் ப்ரௌன் பல்கலைக் கழகத்தில் இவர் அடி எடுத்து வைத்து 19ஆம் வயதில் தன் வகுப்பில் முதல்வராகப் பட்டம் பெற்றார். தன்னுடைய கல்லூரி நாட்களில் தன்னைப் போன்ற திறமையான ஒரு நண்பனைக் கண்டார். ஆனால் அந்த நண்பனோ ஆண்டவரை விசுவாசியாதவனாக இருந்தான்.

அந்த இளைஞன் வேதாகமத்தையோ அல்லது வேத அற்புதங்களையோ நம்பவில்லை. அந்த நண்பனாலே கவரப்பட்ட அதோனிராம் ஜட்சன் தானும் வேதத்தை நம்பாத ஒருவனாக மாறியதால், கடவுளை ஒருவன் தனிப்பட்ட முறையிலே அறிந்து கொள்ள முடியாது என்று கூறினார். இதனால் அவருடைய பெற்றோர் மிகவும் புண்பட்டார்கள். ஜட்சன் தன்னுடைய பட்டப்படிப்பிற்குப் பிறகு தான் ஒரு சிறந்த வழக்கறிஞராக அல்லது நாடக ஆசிரியராக வர வேண்டும் என்ற தணியாத ஆவல் கொண்டார். ஆகவே, அவர் நியூயார்க் பட்டணத்தில் உள்ள ஒரு நாடகக் குழுவில் சேர்ந்தார்.

**கடவுளைக் கண்ட முறை:**

இளைஞரான அதோனிராமின் வாழ்க்கையில் எந்தவிதமான குறிக்கோளும் இல்லாததினால் அவர் மிகவும் நிம்மதி அற்றவராகக் காணப்பட்டார். நாடகக் குழுவில் சேர்ந்தும் அவர் திருப்தி அடைய முடியவில்லை. கிறிஸ்து அற்ற ஒரு மனிதனின் பாடுகளையும், வேதனைகளையும் அவர் அனுபவித்தார். ஒரு இரவிலே தான் தங்கியிருந்த ஒரு கிராமப் புறத்து விடுதியில் தன் அறையின் பக்கத்திலே மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனின் அவலக்குரலைக் கேட்டார். இரவு விழித்திருந்து மனக்குழப்பத்துடன் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அடுத்த நாள் காலை வேளையில் அவர் யார் என்று விசாரித்தபோது ப்ரௌன் யூனிவர்சிட்டியிலே தன்னுடையஇணைபிரியாத தோழனாக வாழ்ந்த அந்த மனிதனே இப்படி இறந்தான் என்று கேட்டு அதிகமாகப் பீதியடைந்தார். அந்த மனிதன் மரிப்பதற்கு ஆயத்தமாக இல்லை என்பதை உணர்ந்தார். இந்த உணர்வு இவரை மேலும் சிந்திக்கச் செய்தது. நிம்மதி இன்றி தவித்தார். ஆறு வாரங்களுக்குப் பிறகு இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அதன்பின் ஆழ்ந்த நிம்மதியைக் கண்டடைந்தார்.

இயேசுவின் வார்த்தைகளை நேசிக்காமல் நீங்கள் அவர் மீது நேசம் கொள்ள முடியாது.
- R.C. ஸ்ப்ரௌல்

## கடவுளின் அழைப்பு:

தன்னுடைய வாழ்க்கையிலே மாற்றம் கண்டபிறகு இனி கடவுளைப் பிரியப்படுத்துவது மட்டுமே தன்னுடைய விருப்பமாகக் கொண்டார். "இது கடவுளைப் பிரியப்படுத்துமா?"என்ற வாசகத்தை தன்னுடைய அறையின் எப்பக்கமும் எழுதி வைத்தார். இவர் தன் வாழ்க்கையில் இதுவரை கொண்டிருந்த ஆசைகளை விட்டுவிட்டு இனிமேல் தன் எதிர்கால வாழ்க்கையில் கடவுளைப் பிரியப்படுத்துவதே தன் வாழ்க்கையில் விருப்பமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அவர் வாசித்த ஒரு புத்தகம் அவருடைய சிந்தனைகளை மிஷனெரி பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள திசை திருப்பிற்று. அவர் சிறு பிள்ளையாக இருக்கும்போது "உலகம் எங்கும் புறப்பட்டுப் போங்கள்" என்று பாடிய பாடல் அவரை அதிகமாகக் கவர்ந்து பற்றிக் கொண்டது. அதுமட்டுமல்ல, இவர் விருப்பமெல்லாம் தான் ஒரு வெளிநாட்டு மிஷனெரியாகச் செல்ல வேண்டும் என்பதாக மாறிவிட்டது! அவரை அனுப்புவதற்காக மிஷனெரி சங்கம் அமெரிக்காவில் அந்த நாட்களில் இல்லாதபடியால் எப்படிச் செல்வது என்ற பிரச்சனை ஏற்பட்டது. இது பற்றி அவர் ஊக்கமாக ஜெபித்தார். மிஷனெரி பற்றிய தன்னுடைய ஆழமான கருத்துக்களை அருட்பணி வாஞ்சை நிரம்பிய தனது நான்கு நண்பர்களோடு பகிர்ந்து கொண்டு ஐந்து பேருமாக சேர்ந்து இதற்காக ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களுடைய ஜெபங்களுக்குக் கடவுள் பதில் அளித்தார். 1810ஆம் ஆண்டு அமெரிக்க அருட்பணி இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. இலண்டன் மிஷனெரி சங்கம் அமெரிக்காவின் மிஷனெரிகளைத் தாங்குவதற்கு முன்வருமா என்பதை அறிவதற்காக ஜட்சன் இலண்டன் மாநகரத்திற்கு அனுப்பப்பட்டார். அப்போது பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் இடையே போர் நடந்து கொண்டிருந்தது. ஆகவே, ஜட்சன் பயணம் செய்த கப்பல் எதிரிகளால் பிடிபட்டது. அவர் ஒரு பாழடைந்த சிறிய அறைக்குள் கைதியாகத் தள்ளப்பட்டார். தன்னைக் கைதியாக்கினவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்வதற்குத் தனக்கு பிரெஞ்சு மொழி தெரியவில்லையே என்று ஜட்சன் அதிகமாக வேதனை அடைந்தார். முன்பின் அறியாத ஒர் அமெரிக்கன் ஒருநாள் ஜட்சன் அடைக்கப்பட்டிருந்த சிறைக்கு வந்து ஜட்சனை ராணுவ உடைகளினாலே மறைத்து அவரை வெளியே கொண்டு வந்து விட்டுவிட்டார். அவர் இலண்டன் அருட்பணி செயற்குழுவிற்கு கொண்டு சென்ற பரிந்துரைகளை அது ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அவர் இங்கிலாந்தை அடைந்ததும் கண்டறிந்தார். என்றாலும் அமெரிக்க அருட்பணியின் செயற்குழு அவரைத் தாங்க முன்வந்தது.

## முன்பின் அறியாத பூமியில்:

அதோனிராம் ஜட்சன், ஆன் ஹாசெல்டின் என்ற அம்மையாரை 1812ஆம் ஆண்டு மணந்தார். பிறகு மிஷனெரி பணி செய்யும் பொருட்டாக இந்தியா நோக்கிப் பயணமானார். ஆனால் அவருக்கான கடவுளுடைய திட்டங்கள் அவரை இன்னொரு தேசத்திற்கு நேராகத் திசை திருப்பியது. அக்காலத்தில் அதிகாரத்திலிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் மிஷனெரி பணி நடைபெறுவதை விரும்பவில்லை. ஆகவே, நான்கு மாத நெடுங்கடல் பயணத்திற்குப் பிறகு இந்தியா வந்திறங்கிய ஜட்சன் தம்பதியரை அவர்கள் உடனே அமெரிக்கா திரும்பிச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டனர். இது அவர்களை அதிகமாகச் சோர்ந்து போகச் செய்தது. கடவுள் அவர்களை மிஷனெரியாகச் செல்ல வேண்டும் என்று அழைக்கவில்லையா? ஆகவே, அவர்கள் இந்தியாவிலேயே தங்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஆயினும் பர்மாவில் உள்ள ரங்கூன் சென்று இறங்கும்வரைக்கும் அவர்கள் ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் கட்டாயமாக கப்பல் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்படியாகக் கடவுள் அவர்களுக்கென்று தேர்ந்தெடுத்த இடம் பர்மாவாக மாறியது.

## அந்நாட்களில் பர்மா:

அந்நாட்களில் பர்மா, சர்வாதிகாரியான ஒரு மன்னனால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. மக்கள் அவனுக்கு அடிமைகளாகவே இருந்தனர். மிஷனெரிகளுக்கு அவன் ஓர் எதிரியாகவே விளங்கினான். புத்தமதம் பர்மாவின் தேசிய மதமாக இருந்தது. அது பெரும் அளவில் அங்கு பரவியிருந்தது. ஒரு கிறிஸ்தவன்கூட பர்மாவில் கிடையாது. கிறிஸ்துவைப் பற்றி அங்கு ஒருவரும் ஒருபோதும் கேள்விப்பட்டதே கிடையாது. கிறிஸ்து தங்கள் உள்ளங்களில் இல்லாதபடியினால் துக்கம் நிறைந்த முகத்தோடும், பாரம் நிறைந்த இருதயத்தோடும் அங்குள்ள மக்கள் அங்கும் இங்குமாக நடந்து திரிந்து கொண்டிருந்தார்கள். இவ்விதமான மக்களைப் பார்த்த ஜட்சனும் அவரது மனைவியாரும் அதிகமாக வேதனை அடைந்தார்கள். அந்த மக்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும் வாய்ப்பிற்காக அவர்கள் மிகவும் அதிகமாக சிரத்தை எடுத்து அந்த நாட்டு மொழியைக் கற்க ஆரம்பித்தார்கள். ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு ஜட்சனின் மனைவி இந்தியாவில் உள்ள சென்னைக்கு மருத்துவ உதவிக்காகச் சென்றார். அங்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் எட்டு மாத காலத்திற்குப் பிறகு அந்தக் குழந்தை இறந்து விட்டது. இதனால் அவர்கள் பெரிதும் வேதனை அடைந்தனர்.

## கடுமையான உழைப்பு:

பர்மியர்களுக்கு அவர்களுடைய மொழியிலேயே கடவுளுடைய வார்த்தை கிடைக்கும் என்றால் அவர்களால் இரட்சிப்பை கண்டடைய முடியும் என்பதை அதோனிராம் நம்பினார். ஆகவே, அவர் ஒருநாளில் 14 மணி நேரம் வரை பர்மிய மொழியை ஆழமாகக் கற்று வேதாகமத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். ஒரு சிறிய அச்சிடும் கருவியை வைத்துக் கொண்டு அதன்மூலம் அவர் துண்டுப் பிரதிகளையும் வேதாகமத்தின் பகுதிகளையும் அச்சிடத் துவங்கினார். அச்சிடும் தொழில் அறிந்திருந்த திரு. ஹாக் என்னும் புதிய மிஷனெரி தன்னுடைய மனைவியோடு அங்கு வந்து சேர்ந்தார். எனவே, மத்தேயு எழுதின நற்செய்தி நூல் வெகுவிரைவாக அச்சிடப்படுவதற்கான வேலைகள் துவங்கப்பட்டன. இரண்டு ஆண்டுகள் கடுமையாக உழைத்தார். பிறகு ஒருநாள் ஜட்சனிடம் ஒருவர் வந்து தனக்குப் படிப்பதற்கு இன்னும் கிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்ட பகுதிகள் தேவை என்று கேட்டார். மத்தேயு நற்செய்தி நூலில் ஐந்து பக்கங்கள் மட்டுமே அச்சமயம் ஆயத்தமாக இருந்தது. அந்தப் பகுதியை ஜட்சன் அவருடைய கரத்தில் கொடுத்தார்.

பொதுமக்கள் கூடுவதற்கென்று ஓர் இடத்தை ஜட்சன் அமைத்து அதில் அவர் பர்மிய மொழியில் பிரசங்கம் பண்ணினார். இரவு நேரங்களில் அவர் அதிக நேரம் மக்களுக்காக ஜெபித்துக் கொண்டிருப்பார். இவர் பேசுவதைக் கேட்பதில் அநேகர் அக்கறை காட்டினார்கள். அவர்களில் ஒருசிலர் புத்தமத குருக்களாகவும் இருந்தார்கள். பர்மாவில் வந்து இறங்கி ஆறு ஆண்டுகள் கடந்த பின்னரே "மௌங் நவ்" என்ற மனிதன் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள முன் வந்தான். துன்பம், மரணம் வரினும் தான் தைரியமாக அதை ஏற்றுக்கொள்ள முன் வந்தான். படிப்படியாக இன்னும் சிலர் முன்வந்தார்கள். ஆக, ரங்கூன் நகரத்தில் உண்மையான பதினெட்டு கிறிஸ்தவர்கள் தோன்றினார்கள். அந்த நாட்களிலே ஆன் அதிகமாக சுகவீனம் அடைந்ததினாலே சிகிச்சைக்காக அமெரிக்க தேசத்துக்கு அனுப்பப்பட்டார். ஜட்சன் தன்னுடைய போதனைகளையும் மொழிபெயர்ப்புக்களையும் தொடர்ச்சியாக செய்து கொண்டு வந்தார். இவர் இறுதியாக புதிய ஏற்பாட்டைப் பர்மிய மொழியில் மொழிபெயர்த்து முடித்தார். அப்போது புதிய சக்கரவர்த்தி ஒருவர் பதவி ஏற்றார். தனது வேலைக்கு அனுமதி பெறும்படி அந்தச் சக்கரவர்த்தியைக் காணச் சென்றார்.

--தொடரும்--

**[தியோடர் வில்லியம்ஸ் எழுதிய "சிலுவையின் ஊழியர்கள்" (IEM Outreach பப்ளிகேஷன்ஸ்) என்னும் புத்தகத்திலிருந்து]**

தேவனை நாம் அறிந்து கொண்டு, அவருடனான உறவை அனுபவிப்பதற்கு முன்பு பரிசுத்த வேதாகமத்தில் உள்ள வேத வாக்கியங்கள் ஒரு கதைப் புத்தகத்தில் உள்ள சாதாரணமான வார்த்தைகளாக இருந்தன. ஆனால், நாம் தேவனை அறிந்துகொண்டபோது, வேத வசனத்தைப் பற்றிய நம் எண்ணம் முற்றிலும் மாறியது. - டாம் ஆலன்



## உங்களுக்குத் தெரியுமா?

# பாவத்திற்கான தீர்வை பரிசுத்த வேதாகமம் வழங்குகிறது

பரிசுத்த வேதாகமம் பாவத்திற்கான தீர்மானமான தீர்வை வழங்குகிறது. அது கூறுகிறது: '**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.** (ஏசாயா 53:5, பைபிள்).

நீங்கள் இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்கும் விதமாக மரித்தார், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதை நம்பி, அவரை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டால், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். இந்த விசுவாச செயல் மூலமாக, நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறி, அவரது கிருபையால் ஏற்படும் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் நீங்கள் அனுபவிக்கலாம்.

பரிசுத்த வேதம் அவரை நம்புவோருக்கு வழங்கப்படும் தனித்துவமான வாக்குறுதிகளால் நிறைந்திருக்கிறது.

**தேவனுடைய அன்பு மற்றும் மன்னிப்பின் உருமாற்றும் வல்லமையை கண்டறிய பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள்.**



### உங்களுக்கு தெரியுமா?

முழு வேதாகமத்திலும் 'கிறிஸ்தவன்(Christian)' என்ற வார்த்தை மூன்று முறை மட்டுமே வருகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? (அப்போஸ்தலர் 11:26, 26:28, 1 பேதுரு 4:16).



### உங்களுக்குத் தெரியுமா?

கடவுள் சாப்பிட வேண்டாம் என்று சொன்ன ஒருவருடன் சாப்பிட்டதால், ஒரு தீர்க்கதரிசி தன் உயிரை இழந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? (1 இராஜாக்கள் 13:20-24 – 'தேவனுடைய மனுஷன்' மற்றும் முதிய தீர்க்கதரிசியின் கதை)



தேவனுடைய வார்த்தையும் ஆவியும் மட்டுமே சபையில் சீர்த்திருத்தத்தை உண்டாக்கும்.
- W. ராபர்ட் காட்ஃப்ரே

# சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR) – 2025

2025 டிசம்பர் 16 அன்று அனுசரிக்கப்பட்ட சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR 2025) சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம். இந்த ஆண்டின் கருப்பொருள், **“வேதாகமத்தை வாசியுங்கள்; உங்கள் வாழ்க்கையைப் புதுப்பியுங்கள்”** என்பதாக இருந்தது. இந்த கருப்பொருள் IDBR 2025 தொடர்பான அனைத்து நிகழ்வுகளுக்கும் வழிகாட்டியாக இருந்து, விசுவாசிகள் வேதவசனங்களில் ஆழமாக ஈடுபட்டு, விசுவாசத்தில் வளர்ந்து, ஆவிக்குரிய புதுப்பித்தலை அனுபவிக்க ஊக்கமளித்தது.

IDBR 2025 நிகழ்வுகளின் போது, இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டு, 6 மொழிகளில் தொடர் வேதவாசிப்பு (Bible Readathon), 8 மொழிகளில் வேதாகம வரலாறு குறித்த Talk Shows, ஆங்கிலம், தமிழ், ஹிந்தி மொழிகளில் Online Mega Bible Quiz, 7 மொழிகளில் Zoom கூடுகைகள் போன்ற நிகழ்வுகளில் பங்கேற்றனர். இந்நிகழ்வுகள் வேதவசனங்களை சிந்திக்கவும், கலந்துரையாடவும், ஆழமாக ஆராயவும் ஊக்கமளித்தன. இந்த நிகழ்வுகளின் மூலம் பங்கேற்பாளர்கள் வேதத்தை வாசித்ததோடு மட்டுமல்லாமல், தங்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தையும் அனுபவித்தனர். “வேதத்தை வாசியுங்கள் - சத்தியம் உங்கள் ஆத்துமாவைத் தூண்டட்டும், உங்கள் வாழ்க்கையைப் புதுப்பியுங்கள் - முழுமையாக மாற்றப்படுங்கள்” என்ற கருப்பொருளை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்தினர்.

## தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சிகள்

கர்த்தருடைய கிருபையினால், சர்வதேச வேதவாசிப்பு தினத்தை முன்னிட்டு 6 மொழிகளில் தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சிகளை நடத்த முடிந்தது. இந்த நிகழ்ச்சியின் நோக்கம் வேத வாசிப்பை ஊக்குவித்தல், விசுவாசத்தை உறுதிப்படுத்தல், விசுவாசிகளை ஒன்றிணைத்தல், சுவிசேஷப் பணிக்கு ஆதரவு அளித்தல் மற்றும் ஆவிக்குரிய புதுப்பித்தலை ஏற்படுத்துதல் இவையாக இருந்தன.

| தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சிகள் | | | |
|---|---|---|---|
| **Date** | **Time** | **Language** | **Portion** |
| 02.10.2025 | 12 Hours | Tamil | Luke 18 – Colossians 4 |
| 14.12.2025 | Almost 6 hours | Tamil | 1 Thes. 1 – Revelation 22 |
| 16.11.2025 | 3 hours and 45 minutes | Tamil | Proverbs 1 – 31 |
| 05.12.2025 | 4 hours and 30 minutes | Marathi | Matthew 1 – Mark 8 |
| 07.12.2025 | 4 hours and 30 minutes | Hindi | Matthew 1 – Mark 8 |
| 09.12.2025 | 4 Hours | Malayalam | Matthew 1 – Mark 16 |
| 13.12.2025 | Almost 4 hours | Bengali | Matthew 1 – 28 |
| 14.12.2025 | 8 Hours | English | John 4 – 2 Corinthians 13 |

வேதாகமத்தின் வெளிச்சம் உங்கள் வெளிச்சமாக இருக்கட்டும், அப்போது நீங்கள் பிளாட்டோவை விட ஞானியாக ஆவீர்கள். - சார்லஸ் ஸ்பர்ஜன்

இந்த Readathon நிகழ்ச்சிகள் Streamyard மென்பொருளை பயன்படுத்தி நடத்தப்பட்டு, GODependence YouTube மற்றும் Facebook சேனல்களில் நேரலை ஒளிபரப்பாகின. பல்வேறு இடங்களிலிருந்தும் நாடுகளிலிருந்தும் மக்கள் கலந்து கொண்டு வேதவசனங்களை வாசித்தனர். இந்த தொடர் வேதவாசிப்பு, பங்கேற்பாளர்களுக்கும் கேட்போருக்கும் தேவனுடைய வார்த்தையை புதிய கோணத்தில் புரிந்துகொள்ள உதவி செய்து, வேதத்தின் மீதான ஆழ்ந்த புரிதலும் மதிப்பும் வளர உதவியது.

2024 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சி ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டுமே நடைபெற்றது. ஆனால் 2025 ஆம் ஆண்டில், தேவனுடைய மகத்தான கிருபையினால், மலையாளம், ஹிந்தி, மராத்தி, பெங்காலி ஆகிய மொழிகளும் சேர்க்கப்பட்டு, ஆங்கிலம் மற்றும் தமிழுடன் மொத்தம் 6 மொழிகளில் Bible Readathon விரிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் மேலும் பலரும், பல்வேறு மொழிப் பின்னணியிலுள்ளவர்களும் பங்கேற்க முடிந்தது.

### Talk Shows – வேதாகம வரலாறு

GODependence ஊழியம், தொடர்ந்து Talk Shows நடத்தி வருகிறது. கிறிஸ்தவ Talk Show நிகழ்ச்சிகள் பல முக்கியமான ஆவிக்குரிய, கல்வி சார்ந்த மற்றும் சமூக காரணங்களுக்காக நடத்தப்படுகின்றன. அதன் மைய நோக்கம், மக்கள் புரிந்துகொள்ளவும் அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தவும் இயலும் வகையில் கிறிஸ்தவ விசுவாசத்தை எடுத்துரைப்பதாகும். கிறிஸ்தவ Talk Show நிகழ்ச்சிகள் போதிக்கவும், ஊக்குவிக்கவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும், விசுவாசத்தை அன்றாட வாழ்க்கையோடு இணைக்கவும் நடத்தப்படுகின்றன.

IDBR ஐ முன்னிட்டு, வேதாகமத்தின் வரலாறு குறித்த Talk Shows நடத்த முடிவு செய்யப்பட்டது. இவை 8 மொழிகளில், Zoom தளத்தின் மூலம் நடத்தப்பட்டு, பல்வேறு பகுதிகளிலிருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**IDBR Talk Shows – வேதாகம வரலாறு**

| Date | Language | Title | Speaker's name |
|---|---|---|---|
| 22.11.2025 | Hindi | History of the Hindi Bible | Pr. Jaras Masih, Hoshiarpur, Punjab |
| 22.11.2025 | Punjabi | History of the Punjabi Bible | Pr. Jaras Masih, Hoshiarpur, Punjab |
| 23.11.2025 | Malayalam | History of the Malayalam Bible | Dr. Jacob Samuel, Thrissur |
| 26.11.2025 | Marathi | History of the Marathi Bible | Dr. Amit Jayantkumar, Tribhuvan, Pune |
| 28.11.2025 | Bengali | History of the Bengali Bible | Pr. Danis Chakrabarty, Bangladesh |
| 30.11.2025 | English | History of the English Bible | Dr. T.S. Raja Sekhar, Southern Asia Bible College, Bangalore |
| 30.11.2025 | Tamil | History of the Tamil Bible | Dr. T.S. Raja Sekhar, Southern Asia Bible College, Bangalore |
| 07.12.2025 | Kannada | History of the Kannada Bible | Pr. Hoysala Gowda,Mandy District, Karnataka |

பரிசுத்த வேதாகமத்தை நாம் வாசித்து தியானிக்கும்போது, இந்த உலகில் தேவனுடைய ஜனங்களுக்கான அவருடைய சித்தத்தையும், அவருடைய திட்டத்தையும் நாம் கண்டுகொள்கிறோம்.

## Online Mega Bible Quiz

IDBR 2025 ஐ முன்னிட்டு, Online Mega Bible Quiz ஒன்று ஆங்கிலம், தமிழ், ஹிந்தி ஆகிய 3 மொழிகளில் நடத்தப்பட்டது. இந்த வினாடி வினாவில்புதிய ஏற்பாட்டிலிருந்து 25 கேள்விகள் இடம் பெற்றன. பங்கேற்பு விவரம்: ஆங்கிலம் – 177 பேர், தமிழ் – 803 பேர், ஹிந்தி – 21 பேர் என மொத்தம் 1,001 பேர் இந்த வினாடி வினாவில் பங்கேற்றனர்.

அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்மின்வடிவ பாராட்டுச் சான்றிதழ் (E-Certificate) வழங்கப்பட்டது. சர்வதேச வேதவாசிப்பு தினத்தை கொண்டாடும் விதமாக, தங்களுடைய மின்வடிவ பாராட்டுச் சான்றிதழ்களை சமூக ஊடகங்களில் பகிர ஊக்குவிக்கப்பட்டனர். பலர் மகிழ்ச்சியுடன் இதனை ஏற்று, டிசம்பர் 16 நாளை நினைவுகூர்ந்து தங்கள் சான்றிதழ்களை பகிர்ந்தனர்.

இந்த Online Mega Bible Quiz ஐ டாக்டர். நேசக்குமார் அவர்கள் சிறப்பாக நடத்தினார். தேவன் சித்தமானால், வருகிற ஆண்டுகளில் மேலும் பல மொழிகளில் இந்த வினாடி வினாவை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## Bible Giveaway Programme

IDBR நிகழ்வுகளின் ஒரு பகுதியாக வேதாகம விநியோக திட்டங்கள் நடத்தப்பட்டன. தேவனுடைய கிருபையினால், இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் தேவையுள்ளவர்களுக்கு 100 ஹிந்தி புதிய ஏற்பாடு வேதாகமங்கள் வழங்கப்பட்டன. மேற்கு வங்காளத்திற்கு 50 ஹிந்தி புதிய ஏற்பாடு மற்றும் 150 பெங்காலி புதிய ஏற்பாடு வேதாகமங்கள் அனுப்பப்பட்டன. GODependence Ministries மூலம் 20 தெலுங்கு வேதாகமங்கள் மற்றும் 25 மராத்தி வேதாகமங்கள் தேவையுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த வேதாகமங்களைப் பெற்ற அனைவரும், பரிசுத்த வேதத்தை வாசித்து, கர்த்தர் இயேசு கிறிஸ்துவை தங்கள் தனிப்பட்ட இரட்சகராக அறிந்துகொள்ள நாம் ஜெபிப்போம்.

| IDBR Zoom கூடுகைகள் | | | |
|---|---|---|---|
| **Date** | **Language** | **Speaker's Name** | **Felicitator's Name** |
| 11.12.2025 | Marathi | Rev. Simon Borde<br>Breakthrough Fellowship Church, Pune | Rev. Ravi Damodar, Pune<br>Bro. Samuel Alhat, Pune |
| 12.12.2025 | Telugu | Rev. Sreedhar Babu Gummadi, Hyderabad | Pr. Daniel Peter<br>Hyderabad |
| 14.12.2025 | Hindi | Pr. Harmesh Masih<br>CMF Bathel Church, Hoshiarpur, Punjab | Pr. Jaras Masih<br>Hoshiarpur, Punjab |
| 15.12.2025 | Bengali | Rt. Rev. Dr. Augustine Sukumar<br>ICM Church, Kolkata | Rev. Dr. James Sarkar<br>Matthias Ministry Odisha, Cuttack |
| 16.12.2025 | English | Dr. Idicheria Ninan<br>Chairman of ESAF Foundation | Bro. V. Samuel Baptist<br>UESI-TN, Trichy<br>Rev. M. G. Daniel |
| 16.12.2025 | Malayalam | Dr. Idicheria Ninan<br>Chairman of ESAF Foundation | Bro. Jose Chempanal, Thrissur<br>Bro. Sujoy Jacob, Kochi |
| 16.12.2025 | Tamil | Dr. Ashok Kumar, Founder of CAMS India & Nepal | Bro. V. Samuel Baptist<br>UESI-TN, Trichy |

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்கள் வேதாகமங்களைப் புறக்கணிப்பது, இயேசுவின் மீது உள்ள விசுவாசமின்மையினால் அல்ல. மாறாக வேதாகமத்தை படிக்க நேரத்தையும், இடத்தையும், வழிமுறைகளையும் திட்டமிடுவதில் தோல்வியடைவதால் ஆகும். - ஜான் பைபர்

### Zoom கூடுகைகள்

IDBR கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, ஆங்கிலம், தமிழ், மலையாளம், பெங்காலி, மராத்தி, தெலுங்கு, ஹிந்தி ஆகிய 7 மொழிகளில் Zoom கூடுகைகள் நடத்தப்பட்டன.

இந்த அமர்வுகளின் போது, GODependence வேதவாசிப்பு சவாலின் மூலம் தொடர்ந்து வேதத்தை வாசித்து வந்த சில பங்கேற்பாளர்கள், தங்களுடைய வேதவாசிப்பு அனுபவங்களைச் சாட்சிகளாகப் பகிர்ந்தனர். மேலும், மேரி ஜோன்ஸ் குறித்து ஒரு காணொளி நிகழ்ச்சி (Video Presentation) அந்தந்த மொழிகளில் காண்பிக்கப்பட்டது. பல்வேறு மொழிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் GODependence வேதவாசிப்பு சவால் குழு உறுப்பினர்களும் இந்த Zoom கூடுகைகளில் பங்கேற்றனர்.

இந்த கூடுகைகள், பல்வேறு பகுதிகளிலும் மொழிகளிலும் உள்ள விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையை கேட்க, வேதவாசிப்பின் முக்கியத்துவத்தை கொண்டாட, மற்றும் சர்வதேச வேதவாசிப்பு தினத்தை ஒன்றுபட்ட முறையில் அனுசரிக்க ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தன.

இந்த IDBR 2025 நிகழ்வுகள் மூலம் பங்கேற்ற அனைவரும் வேதவாசிப்பின் அவசியத்தை மேலும் ஆழமாக உணர்ந்து, சர்வதேச வேதவாசிப்பு தினம் குறித்து இன்னும் அதிகமான மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**- சகோ. டென்சிங், குவைத்.**

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 14 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 14 IIதெசலோனிக்கேயர்-இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 14

➡ இடமிருந்து வலம்
10. துரோகம் (2:3)

⬅ வலமிருந்து இடம்
2. தீர்ப்பு (1:5)
4. கிருபை (3:18)

⬇மேலிருந்து கீழ்
1. புத்தி (3:15)
3. நிருபங்கள் (3:17)
5. வசனம் (3:1)
6. கடனாளி (1:3 & 2:13)

⬆ கீழிருந்து மேல்
7. அநீதி (2:11)
8. ஆறுதல் (2:16)
9. நன்மை (3:13)

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 14

1) 2 தெசலோனிக்கேயர் 1:8
2) 2 தெசலோனிக்கேயர் 1:4
3) 2 தெசலோனிக்கேயர் 2:17
4) 2 தெசலோனிக்கேயர் 2:8
5) 2 தெசலோனிக்கேயர் 2:14
6) 2 தெசலோனிக்கேயர் 3 :17
7) 2 தெசலோனிக்கேயர்3:13
8) 2 தெசலோனிக்கேயர்4:15
9)2 தெசலோனிக்கேயர் 3:2
10) 2 தெசலோனிக்கேயர் 3.5

நாம் உயிர்வாழ்வதற்கு சுவாசிப்பது எவ்வளவு அவசியமானதோ அதே போல நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமம் அவசியமானது. நம் வாழ்க்கைக்கு தேவனுடைய வார்த்தையை விட மிகவும் அத்தியாவசியமானது என்று எதுவும் இல்லை. - ஜாக் W. ஹேவர்ட்

# சூனேம் ஊர் பெண்


## எலிசாவிற்கு ஊழியம் செய்ததால் ஆசீர்வதிக்கப்பட்டாள்

எலிசா சூனேமுக்குச் சென்றபோது, ஒரு பெண் அவரை உணவுக்காகத் தங்குமாறு வற்புறுத்தினாள். எலிசா தேவனுடைய பரிசுத்த மனிதர் என்பதை அவள் உணர்ந்தாள். அதனால், அவனுக்காக வீட்டின் மேல் தளத்தில் ஒரு அறையைக் கட்டும்படி தன் கணவனைச் சம்மதிக்க வைத்தாள்.

ஒருமுறை சந்தித்தபோது, எலிசா அவளுக்காக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அவள் எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை. எலிசாவின் ஊழியக்காரன் கேயாசி அவரிடம், “இவளுக்கு மகன் இல்லை, இவள் கணவனும் முதிர்வயதானவர்” என்று சொன்னான். அப்பொழுது எலிசா அவளிடம், “அடுத்த வருடம் இதே நேரத்தில், உன் கைகளில் ஒரு மகன் இருப்பான்” என்று சொன்னார். அவளால் அதை நம்ப முடியாவிட்டாலும், அடுத்த வருடம் அதே நேரத்தில் அவள் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.

ஒரு நாள், அவளுடைய மகன் திடீரென்று இறந்துவிட்டான். அவள் உடனடியாக எலிசாவிடம் சென்றாள். அப்பொழுது எலிசா அவள் வீட்டிற்கு வந்து அவனை மீண்டும் உயிர்ப்பித்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஏழு வருடங்களுக்குப் பஞ்சம் வரப்போவதால், தன் குடும்பத்துடன் அங்கிருந்து சென்றுவிடும்படி எலிசா அந்த சூனேம் ஊர் பெண்ணிடம் கூறினார். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் பெண் திரும்பி வந்து, தன் வீட்டையும் நிலத்தையும் திரும்பப் பெறுவதற்காக ராஜாவிடம் சென்றாள்.



(2 இராஜாக்கள் 4:8-37 / 8:1-6)

அந்த நேரத்தில், கேயாசி அந்தப் பெண்ணை ராஜாவுக்கு அறிமுகப்படுத்தினான். அப்பொழுது ராஜா, அவளுக்குச் சொந்தமான அனைத்தும் அவளுக்கே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

### பாடங்கள்:

- அவள் தேவனுடைய மனிதனை கனம்பண்ணினாள்.
- தேவன் அவளுக்கு ஒரு மகனைக் கொடுத்து அவளைக் கனம்பண்ணினார்.
- மகன் இறந்தபோதிலும், அவன் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டான்.
- அவள் பஞ்சத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு காப்பாற்றப்பட்டாள்.
- இறுதியாக, அவளுடைய உடைமைகள் அவளுக்குத் திரும்பக் கிடைத்தன.
- நீங்கள் தேவனை கனம்பண்ணினால், அவர் உங்களைக் கனம்பண்ணுவார். (1 சாமுவேல் 2:30).

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். இந்த வசனமானது உங்கள் விருப்பங்களை எல்லாம் தேவன் நிறைவேற்றுவார் என்பதை அல்ல, அவர் தமது விருப்பத்தை உங்கள் இருதயத்தில் விதைப்பார் என்பதைக் குறிக்கிறது. - ஜான் மெக்ஆர்தர்

# GODependence சமூக ஊடக தளங்கள்

## GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1.2K சந்தாதாரர்களையும் 265 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







## GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

பரிசுத்த வேதாகமத்தைப் பற்றி அல்ல, பரிசுத்த வேதாகமத்தையே வாசியுங்கள். பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை ஆகும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே தேவனுடைய வார்த்தை. - R. A. டோரி

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

31 டிசம்பர் 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்






















விடாமுயற்சியுடன் வேதாகமத்தை வாசிப்பதன் மூலம், உங்கள் மனதை வேத வசனங்களால் நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். அப்போது அதன் மதிப்பையும் ஆற்றலையும் விரைவில் கண்டுபிடிப்பீர்கள். - ஜே சி ரைல்

# ஆங்கில வேதாகமத்தின் வரலாறு

**-முனைவர் T.S ராஜசேகர், பெங்களூர்**




தேவன் தம்முடைய அன்புக்குரிய மக்களுடன் உடனிருந்து வாழ விரும்புகிறார். ஒரு உறவை உருவாக்கவும் பராமரிக்கவும், ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளுதல் அவசியம். தேவன் நம்மைப்பற்றி அனைத்தையும் அறிந்தவராக இருக்கிறார். ஆனால் அவர் தம்மை வெளிப்படுத்தினால் மட்டுமே நாம் அவரை அறிந்துகொள்ள முடியும். தேவன் தம்மை பொதுவான வெளிப்பாடுகள் மூலமாக–அதாவது அவரது சிருஷ்டி மற்றும் மனித வரலாற்றில் அவர் செய்த செயல்கள் மூலம்–வெளிப்படுத்தியுள்ளார். இந்த இரண்டு பொதுவான வெளிப்பாடுகளுக்கு மேலாக, அவர் சிறப்பான இரண்டு வெளிப்பாடுகளையும் கொடுத்துள்ளார்: ஒன்று எழுத்து வடிவிலான தேவனுடைய வார்த்தையான வேதாகமம், மற்றொன்று உயிருள்ள தேவனுடைய வார்த்தையான இயேசு கிறிஸ்து.

தேவன் தம்முடைய ஊழியக்காரர்களைத் தேர்ந்தெடுத்து, தம்மை வெளிப்படுத்த விரும்பிய மக்களுக்காகத் தமது செய்திகளை எழுதும்படி அவர்களை ஊக்குவித்தார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலின் கீழ், இந்த எழுத்துக்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு வேதமாக (Canonized as Scripture) ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதனால், **பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும்** உள்ளன. இவை தேவனுடைய இயல்பு, நோக்கங்கள் மற்றும் அவர் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது ஆகியவற்றை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

இந்த புத்தகங்கள் முதன்முதலில் பெற்ற மக்களின் மொழிகளில் எழுதப்பட்டன. **பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும்** எழுதப்பட்டது. இம்மொழிகளை நாம் பேசுவதில்லை என்பதால், வேதாகமம் நம்முடைய சொந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்தக் கட்டுரையில், ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பின் வரலாற்றைச் சுருக்கமாக நாம் காணப்போகிறோம்.

**ஜான் விக்ளிஃப்** (John Wycliffe) மற்றும் அவரைப் பின்பற்றிவனர்கள் **சுமார் 1380** ஆம் ஆண்டில் லத்தீன் வல்கேட் (Latin Vulgate) மொழியிலிருந்து வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர்.

மரித்துப் போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் மாபெரும் கருவி தேவனுடைய வார்த்தை. - டி.எல் மூடி

**வில்லியம் டிண்டேல்** (William Tyndale) எபிரேய மற்றும் கிரேக்க மூல மொழிகளிலிருந்து ஆங்கில வேதாகமத்தை மொழிபெயர்த்த முதல் நபர் ஆவார். அவர் 1526 ஆம் ஆண்டு புதிய ஏற்பாட்டை முழுமைப்படுத்தினார், ஆனால் பழைய ஏற்பாட்டை முடிப்பதற்கு முன்பே அவர் சாட்சியாகக் கொல்லப்பட்டார்.

அதனை **மைல்ஸ் கவர்டேல்** (Miles Coverdale) 1535 ஆம் ஆண்டில் நிறைவு செய்தார். பின்னர் Great Bible (1539) மற்றும் Geneva Bible (1560) வெளிவந்தன. இதன் பின்னர், **மன்னர் முதலாம் ஜேம்ஸ் (King James I)** அதிகாரப்பூர்வமான ஒரு வேதாகம மொழிபெயர்ப்பை உருவாக்க ஆணையிட்டார். அதன் விளைவாக 1611 ஆம் ஆண்டு King James Version (KJV) வெளியிடப்பட்டது. காலப்போக்கில் அதில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் வழக்கொழிந்து போனதால், 1885 ஆம் ஆண்டில் அது English Revised Version ஆக திருத்தம் செய்யப்பட்டது.

### பிரபலமான சில வேதாகம மொழிபெயர்ப்புகளின் வெளியீட்டு ஆண்டுகள்:

- 1901 – American Standard Version
- 1952 – Revised Standard Version
- 1971 – New American Standard Bible (NASB)
- 1973 – New International Version (NIV)
- 1982 – New King James Version (NKJV)
- 1990 – New Revised Standard Version (NRSV)
- 2002 – English Standard Version (ESV)
- 2004 – Christian Standard Bible (CSB)
- 1996 – New Living Translation (NLT)
- 2011 – Common English Bible (CEB)

### வேதாகம மொழிபெயர்ப்புகளை வழிநடத்தும் முக்கியக் கொள்கைகள்:

- **நேரடி / வார்த்தைக்கு-வார்த்தை நேரடி மொழிபெயர்ப்பு (Literal / Word-for-Word):** NASB, ESV, NET, KJV, NKJV
- **பொருள்-க்கு-பொருள் மொழிபெயர்ப்பு (Meaning-for-Meaning):** CSB
- **கருத்து-க்கு-கருத்து மொழிபெயர்ப்பு (Thought-for-Thought / Dynamic):** NIV, NLT, CEB
- **மறுவிளக்கம் / மீள்கூறல் மொழிபெயர்ப்பு (Paraphrase):** NIRV, GNT, MSG

**– Dr. T.S. ராஜசேகர்,** பெங்களூர்.

(ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்புகள் குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயங்காமல் கேட்கலாம். அடுத்த செய்திமடலில் ஆசிரியர் அதற்கு பதிலளிப்பார்.)

தேவனை நாம் அறிந்து கொண்டு, அவருடனான உறவை அனுபவிப்பதற்கு முன்பு பரிசுத்த வேதாகமத்தில் உள்ள வேத வாக்கியங்கள் ஒரு கதைப் புத்தகத்தில் உள்ள சாதாரணமான வார்த்தைகளாக இருந்தன. ஆனால், நாம் தேவனை அறிந்துகொண்டபோது, வேத வசனத்தைப் பற்றிய நம் எண்ணம் முற்றிலும் மாறியது. - டாம் ஆலன்

# சாட்சி - சகோதரி. மனோ மேக்தலின் ★★★★★

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

பிரைஸ் த லார்ட். என்னுடைய பெயர் மனோ மேக்தலின். நான் கோயம்புத்தூரிலிருந்து பேசுகிறேன். இந்த வேதவாசிப்பு குழுவில் இணைந்து தற்போது நான் பைபிள் வாசித்து கொண்டிருக்கிறேன். இதற்கு முன்னர் நான் பைபிளை வாசித்தது என்றால், வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே. அது கூட சில நேரங்களில் சரியாக வாசிக்க முடியாமல் போய்விடும். ஆனால் வருடத்திற்கு ஒரு முறை என்றாலும், கண்டிப்பாக அதை முழுமையாக முடித்துவிடுவோம்.

அந்த நேரத்தில் என் சபையில் இருக்கும் எங்கள் பாஸ்டருடைய மகன், வேர்ட்சன் ஜெயகுமார் தம்பி, "அக்கா, இப்படி ஒரு வேதவாசிப்பு குழுத் திட்டம் இருக்கிறது. நீங்கள் அதில் இணைந்தால், அது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நான் அதில் இணைந்து பலமுறை பைபிள் வாசித்திருக்கிறேன், அது எனக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது" என்று சொல்லியிருந்தார். அதற்குப் பிறகுதான் எனக்கு இப்படியொரு குழு இருப்பது தெரிய வந்தது.

**நீங்கள் இதுவரை முழு பைபிளையும் எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்? அதில் எத்தனை முறை GODependence திட்டத்தின் மூலம்?**

2025 ஆம் ஆண்டில்தான் இந்த வேதவாசிப்பு குழுவைப் பற்றி தெரிந்து, அதில் நான் இணைந்தேன். அதில் சேர்ந்த பிறகு, இந்த வருடம் மட்டும் 11 மாதங்களுக்குள் நான்கு முறை முழு பைபிளையும் வாசித்து முடித்திருக்கிறேன். ஒரு மாத வேத சவால்கள் இரண்டு முறையும், இரண்டு மாத வேத சவால்கள் இரண்டு முறையும் என, மொத்தம் நான்கு முறை இந்த வருடத்தில் மட்டும் பைபிளை முடித்திருக்கிறேன். இது கர்த்தர் எனக்கு செய்த மிகப்பெரிய தயவு. கர்த்தருக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்த ஊழியத்தை செய்கிற உங்களையும் கர்த்தர் அதிகமாக ஆசீர்வதிப்பாராக. கர்த்தருடைய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

**GODependence குழுவின் முறை உங்களுக்கு எவ்வாறு உதவியது?**

இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. பொதுவாக, மற்ற நாட்களிலும் மற்ற சமயங்களிலும் பைபிள் வாசிக்கும் போது, ஒரு பகுதியை விட்டுவிட்டால் அதை மீண்டும் முழுமையாக வாசிக்க முடியாமல் போய்விடும். அப்படியே விட்டுவிடுவோம். ஆனால் இதில் அப்படியில்லை. தினமும் ஒரு பகுதி அனுப்பப்படுகிறது. அந்த பகுதியை நிச்சயமாக முடிக்க வேண்டும் என்று நம்முடைய மனதில் ஒரு பொறுப்பு உருவாகிறது.

ஒரு மாத திட்டமாக இருந்தாலும், அதில் நாம் சேர்ந்துவிட்டால் எப்படியாவது அந்த திட்டத்திற்கான பகுதிகளை முடிக்க வேண்டும் என்ற உறுதி வருகிறது. எதிர்பாராத முக்கியமான வேலை காரணமாக சில நாட்கள் தவறினாலும், ஞாயிற்றுக்கிழமை அன்று விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு தருகிறார்கள். அதனால், கொஞ்சம் தவறினாலும் அதை மீண்டும் கம்ப்ளீட் செய்ய முடிகிறது.

இந்த முறையால்தான் இந்த வருடத்தில் நான் நான்கு முறை முழு பைபிளையும் வாசிக்க முடிந்தது. இதற்கு முன்பு என் வாழ்க்கையில் ஒரு முறை முழுவதும் வாசிப்போம், அடுத்த முறை பாதியில் நிறுத்திவிடுவோம் என்ற நிலைதான் இருந்தது.

**பரிசுத்த வேதாகமத்தைப் படிப்பதன் மூலம் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்கள் என்ன?**

இந்த நான்கு முறை வாசித்தது முழுவதும் கர்த்தர் எனக்கு கொடுத்த கிருபை. என் வாழ்க்கையில் இதுவரை இப்படியாக நான்கு முறை முழுமையாக பைபிளை வாசித்தது இதுதான் முதல் முறை. கர்த்தருக்கு கோடான கோடி மகிமையும், கோடான கோடி ஸ்தோத்திரமும் உண்டாவதாக.

இந்த மாதிரியான ஊழியங்களை செய்கிற உங்களையும் ஆண்டவர் ஆசீர்வதிக்க வேண்டும். இதுபோன்ற ஊழியங்கள் எங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கின்றன. பைபிள் ரீடத்தான் என்று சொல்லி அக்டோபர் 2 ஆம் தேதி நடந்த நிகழ்விலும் நான் கலந்து கொண்டேன். கர்த்தருடைய கிருபையால், நேற்று (டிசம்பர் 14 ஆம் தேதி) நடந்த பைபிள் ரீடத்தானிலும் கலந்து கொண்டு, அதை வெற்றிகரமாக முடிக்க கர்த்தர் கிருபை தந்தார்.

**இறுதியாக, சில வரிகளில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

உண்மையாகவே, உலக காரியங்களை விட ஆவிக்குரிய காரியங்களில் நாம் அதிகமாக ஈடுபடும் போது, கர்த்தர் நம் மனதுக்கு சமாதானத்தை கொடுக்கிறார். இப்போது ஐந்தாவது முறையாக பைபிள் வாசித்து கொண்டிருக்கிறேன். இந்த வருடம் முடிவதற்குள் ஐந்தாவது முறையும் முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வாசித்து வருகிறேன். கர்த்தருக்கு கோடான கோடி நன்றி. இந்த ஊழியத்தை செய்கிற உங்களையும், உங்கள் ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. தேவனுக்கே மகிமை.

## வாசகர் வாய்ஸ்

இந்த செய்திமடலின் உள்ளடக்கங்களைச் சார்ந்த உங்கள் கருத்துக்கள், பின்னூட்டங்கள், சாட்சிகள் மற்றும் கேள்விகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வாசகர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்படும் பதிவுகள் ஒவ்வொரு மாதமும் GODependence செய்திமடலின் **வாசகர் வாய்ஸ்** பகுதியில் வெளியிடப்படும்.

உங்கள் வாய்ஸ் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மாதமும் உங்களிடமிருந்து கேட்க ஆவலுடன் எதிர் நோக்குகிறோம்.

**+965 6596 2559**

தேவனுடைய வார்த்தையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கிறது. அதனுடன் ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போட்டி போட முடியாது. - ஜோசப் ஸ்டோவெல்

# 1 தீமோத்தேயு

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 62- கி.பி. 64
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 62
**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டுகடிதங்களும், தீத்துவுக்கு எழுதப்பட்ட கடிதமும், ஆயர் பணிக்கடிதங்கள் என வழங்கப் பெறுகின்றன. ஆயர்களான தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் ஆயர் பணி பற்றி எழுதப்பட்டுள்ளதால் இவை இவ்வாறு பெயர் பெறுகின்றன.

## சூழலும் நோக்கமும்

- பவுலுடைய உடன் உழைப்பாளர் தீமோத்தேயு லீஸ்திராவைச் சேர்ந்தவர். தந்தை கிரேக்க மொழி பேசும் பிற இனத்தார், தாய் யூதக் கிறிஸ்தவர் (அப் 16:1). பவுலின் மூலம் கிறிஸ்தவராகி, இரண்டாம் மூன்றாம் நற்செய்திப் பயணங்களில் உடன்பணியாளராய்த் தீமோத்தேயு செயல்பட்டார் (அப் 16:3; 19:22). முக்கிய பணிகளுக்குப் பல வேளைகளில் பவுல் அவரைத்தான் அனுப்பினார் (அப் 19:2, 1 கொரி 4:17, 1 தெச 3:2). 1 தீமோ 1:3-ன் படி தீமோத்தேயு எபேசிய திருச்சபையின் கண்காணிப்பாளராய் (ஆயராய்) இருந்தார் எனத் தெரிகிறது.பவுல் எபேசு சபையைக் கண்காணிக்குமாறு தீமோத்தேயுவை ஏற்படுத்திய பின் (1:3) மக்கதோனியா சென்றார். மீண்டும் தாம் எபேசுக்கு வரப்போவதில்லை என உணர்ந்த அவர், தாம் ஆயராக நியமித்த தீமோத்தேயுவுக்கு அவர்தம் கடமைகளை நினைவுறுத்துவதற்காக இக்கடிதத்தை எழுதினார். எபேசிய திருச்சபையின் மற்றும் ஆசிய மாகாணத்தில் உள்ள மற்ற திருச்சபைகளின் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பில் அவரை ஊக்குவிப்பதற்காக பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார் (1 தீமோ 1:3). இக்கடிதம் மூப்பர்களை நியமிப்பதற்கான அடித்தளத்தை அமைக்கிறது (1 தீமோ 3:1-7), மற்றும் மக்களை திருச்சபையின் அலுவலகங்களில் நியமிப்பதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது (1 தீமோ 3:8-13). சாராம்சத்தில், 1 தீமோத்தேயு திருச்சபை அமைப்பு மற்றும் நிர்வாகத்திற்கான தலைமை கையேடு ஆகும்.

## முக்கிய வசனங்கள்

1 தீமோ 2:5, 1 தீமோ 2:12, 1 தீமோ 3:1-3, 1 தீமோ 4:9-10, 1 தீமோ 6:12

## புத்தகத்தின் சுருக்கம்

- தவறான போதனைகளை எதிர்க்குமாறு பவுல் கூறுகிறார் (1:3-7; 4: 1-8; 6: 3-5; 20-21). ஏனெனில் அக்காலத்தில் ஞான உணர்வுக் கொள்கை பரவத் தொடங்கியிருந்தது. உலகம் கெட்டது என்றும், ஒருவர் இரட்சிப்புப்பெற வேண்டுமென்றால் மறைவான அறிவு பெற வேண்டும் என்றும், பலவகை உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்றும், திருமணம் புரியலாகாது என்றும் இக்கொள்கை கூறியது. எபேசு திருச்சபையின் வழிபாடு, நிர்வாகம் ஆகியவற்றைச் செவ்வனே கவனிக்குமாறு பவுல் பணிக்கிறார் (2: 1-15), தகுதியான தலைவர்களை நியமிக்குமாறும் அறிவுரை கூறுகிறார் (3:1-13; 5:17-25). பவுல் தனது பணியில் உதவியாக இருந்த இளம் போதகரான தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் கடிதம் இதுவாகும். தீமோத்தேயு ஒரு கிரேக்கர். அவரது தாயார் ஒரு யூதர் மற்றும் அவரது தந்தை கிரேக்கர். பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருந்தார், அவர் அவருக்கு ஒரு தந்தையைப் போல இருந்தார், மேலும் தீமோத்தேயு பவுலுக்கு ஒரு மகனைப் போல இருந்தார் (1 தீமோ 1:2). தவறான போதகர்கள் மற்றும் தவறான கோட்பாட்டிற்கு எச்சரிக்கையாக இருக்குமாறு தீமோத்தேயுவை வலியுறுத்துவதன் மூலம் பவுல் கடிதத்தைத் தொடங்குகிறார். இருப்பினும், கடிதத்தின் பெரும்பகுதி ஆயர் நடத்தை பற்றி குறிப்பிடுகிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு ஆராதனை (அதிகாரம் 2) மற்றும் திருச்சபையின் முதிர்ந்த தலைவர்களை உருவாக்குதல் (அதிகாரம் 3) பற்றி அறிவுறுத்துகிறார். பெரும்பாலான கடிதங்கள் ஆயர் நடத்தை, தவறான ஆசிரியர்கள் பற்றிய எச்சரிக்கைகள், விதவைகள், மூப்பர்கள் மற்றும் அடிமைகள் மீதான திருச்சபையின் பொறுப்பு ஆகியவற்றைக் கையாளுகின்றன. கடிதம் முழுவதும், பவுல் தீமோத்தேயுவை உறுதியாக நிற்கவும், விடாமுயற்சியுடன் இருக்கவும், அவருடைய அழைப்புக்கு உண்மையாக இருக்கவும் ஊக்குவிக்கிறார்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- 1 தீமோத்தேயுவின் புத்தகத்தில் உள்ள பழைய ஏற்பாட்டிற்கான இனிஅப்புகள் உள்ளன. திருச்சபை மூப்பர்களை "இரட்டை மரியாதைக்கு" தகுதியானவர்கள் என்று கருதுவதற்கான அடிப்படையை பவுல் மேற்கோள் காட்டுகிறார், மேலும் தவறு செய்ததாக குற்றம் சாட்டப்படும்போது (1 தீமோ 5:17 -19) உபாகமம் 24:15; 25:4; மற்றும் லேவி 19:13 ன் அடிப்படையில் அனைத்துமே ஒரு தொழிலாளிக்கு அவர் சம்பாதித்ததைக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும், அதை சரியான நேரத்தில் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இப்புத்தகம் பேசுகிறது. ஒரு மனிதனுக்கு எதிரான குற்றச்சாட்டைக் கொண்டுவர இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் அவசியம் என்று மோசே சட்டத்தின் ஒரு பகுதி கோரியது (உபா 19:15). தீமோத்தேயு போதித்த திருச்சபைகளில் உள்ள யூத கிறிஸ்தவர்கள் இந்த பழைய ஏற்பாட்டின் தொடர்புகளை நன்கு அறிந்திருந்தனர்.

## நடைமுறைப் பயன்பாடு

- இயேசு கிறிஸ்து, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக பவுலால் முன்வைக்கப்படுகிறார் (1 தீமோ 2:5). திருச்சபைக் கோட்பாடு, தலைமை மற்றும் நிர்வாகம் ஆகிய விஷயங்களில் பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்துகிறார். இன்று நமது உள்ளூர் சட்டமன்றத்தை ஆளும் அதே வழிமுறைகளை நாம் பயன்படுத்தலாம். அதேபோல், ஒரு போதகரின் பணி மற்றும் ஊழியம், ஒரு மூப்பருக்கான தகுதிகள் மற்றும் ஒரு கண்காணிக்கான தகுதிகள் ஆகியவை தீமோத்தேயுவின் நாளில் இருந்ததைப் போலவே இன்றும் முக்கியமானவை மற்றும் பொருத்தமானவையாக இருக்கின்றன. தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதிய இக்கடிதத்தில் உள்ளூர் திருச்சபையை வழிநடத்துதல், நிர்வகித்தல் மற்றும் மேய்த்தல் பற்றிய அறிவுறுத்தல் உள்ளது. இந்தக் கடிதத்தில் உள்ள அறிவுரைகள் கிறிஸ்துவின் திருச்சபையின் எந்தவொரு தலைவருக்கும் அல்லது வருங்காலத் தலைவருக்கும் பொருந்தும் மற்றும் அவை பவுலின் நாளில் இருந்ததைப் போலவே இன்றும் பொருந்துகின்றன. ஒவ்வொரு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களும் விசுவாசத்திற்காக போராட வேண்டும் மற்றும் தவறான போதனைகளை தவிர்க்க வேண்டும், அதோடு உறுதியாகவும் விடாமுயற்சியுடனும் நிற்க வேண்டும்.

## நூலின் அமைப்பு

1) முன்னுரை 1:1 - 2
2) நலமான போதனை 1:3 - 20
3) ஆராதனை, தலைமைப்பணி பற்றிய அறிவுரைகள் 2:1 - 3:16
4) தீமோத்தேயுவின் பணி பற்றிய அறிவுரைகள் 4:1 - 6:19
5) இறுதிப் பரிந்துரையும் எச்சரிக்கையும் 6:20 – 21

GODDependence

தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

தேவனுடைய வார்த்தை எனும் நங்கூரத்திலிருந்து நாம் துண்டிக்கப்படுவோமெனில், நாம் விடுதலையைப் பெறமாட்டோம். மாறாக, நாம் நமது தனிப்பட்ட உணர்வுகளுக்கும் உலகின் பிரபலமான போக்குகளுக்கும் அடிமைகளாகிவிடுவோம். - ஜான் பைபர்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 15

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**வேதப்பகுதி: 1 தீமோத்தேயு**

1



2



3



4



5



6



7



8



9



10



https://forms.gle/FngFk7MtbyxcFBuz5

- மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/01/2026 க்கு முன்பதாக அனுப்பவும்.
- சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 14மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 14 IIதெசலோனிக்கேயர்-இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள்

**வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 14**

- ஆர் ஜோசபின்
- மணி மாலா ச.
- அ.ஜாய்ஸ் செல்லத்துரை
- லிடியா ஷாலோம் ஜே
- கிறிஸ்டி ஜோசப்
- அமுதா
- கிருபா ஜான்சன்
- டி. ரேணுகா
- ரைச்சல் அமுதவல்லி
- லூர்து மேரி
- ஜினிஷா கி. வி

**விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 14**

- உ. மிராகிளின் ஜெஸி
- அ.ஜாய்ஸ்
- கிறிஸ்டி ஜோசப்
- அமுதா ஜெகன்
- டி. ரேணுகா
- ஜினிஷா சி வி


செய்தித்தாளை வாசிக்கிறவர் உலக நடப்பை அறிந்துகொள்கிறார். பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறவர் அவை ஏன் நடைபெறுகின்றன என்பதை அறிந்து கொள்கிறார்.

- பெயர் அறியப்படாதவர்

# GODependence நிகழ்வுகள்

## 1

## தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி (Bible Readathon) - 26.01.2026




2026 ஆம் ஆண்டில் மாதந்தோறும் ஒரு தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சிகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம்.

அதன்படி இந்த ஜனவரி மாதம் 26 ம் தேதி அன்று இந்திய நேரம் மாலை 3 மணிக்கு ஆரம்பித்து ஆங்கில மொழியில் ஒரு தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

நல்ல இணைய (Internet) வசதியும் ஆங்கிலத்தில் சரளமாக வேதாகமம் வாசிப்பவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

## 2




## GODependence கருத்தரங்கு - ஜனவரி 2025

**தலைப்பு: வேதவாசிப்பும் ஆவிக்குரிய உருவாக்கமும்**

(ஆவிக்குரிய உருவாக்கம் என்பதன் அடிப்படை உண்மைகளை புரிந்துகொண்டு, இயேசுவைப் போல மாறுவதற்கான இரகசியத்தை அறிந்து கொள்ளவும், வேத வாசிப்பின் மூலம் சுயத்தை மையமாகக் கொண்ட வாழ்வில் இருந்து தேவனை மையமாகக் கொண்ட வாழ்க்கையை நோக்கிச் செல்லவும் உதவுகிற கருத்தாழம் நிறைந்த கருத்தரங்கு மற்றும் அர்த்தமுள்ள கலந்துரையாடல்)

**நாள்:** **31 ஜனவரி 2026 சனிக்கிழமை மாலை இந்திய நேரம் 6:30 முதல் 7:30 மணி வரை**

**கருத்துரை:** **Rev. Dr. J. N. Manoharan, சென்னை.**

## 3

## வேத தியான குழுக்கள் (BMG) - பயிற்சி அமர்வுகள்

**2025 நாம் மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், இதுவரையும் தொடங்கப்படவில்லை.**

வேத தியானக் குழுக்களில் இணைய விரும்புபவர்களுக்காக "தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பது எப்படி" என்ற தலைப்பில் பயிற்சி நிகழவுகள் விரைவில் திட்டமிடப்பட்டு நடைபெற இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.



FOLLOW US!

GODependence **வேதவாசிப்பு சவால்கள்**

+965 6596 2559

GODependence - தமிழ் (YouTube)

GODependence - தமிழ் (Facebook)

GODependence - தமிழ் (Instagram)

GODependence (Website)

X GODependence


தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. - இம்மானுவேல் காண்ட்